**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை**

**O.S.No. 96/2017**

வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி : வா.சா.1

பெயர் : கருப்பையா

தகப்பனார் பெயர் : காளிப்பயல்

தொழில் :

கிராமம் :

தாலுகா :

2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் நாள் வியாழக்கிழமை 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்ச் கிளார்க் திரு.மா.ஆ.மணியரசன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை எழுத்துமூலமாக நிருபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

1. 01.09.2005ம் தேதிய தாவாச் சொத்துக்களும் அதனுடன் சேர்ந்த சொத்துக்களும் வாதிக்கு பூர்விகப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதற்கும் வாதியின் தகப்பனார் காலிப்பயல் என்பவர் பெயரில்தான் பட்டாவும் இருந்துள்ளது என்பதற்கும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ள "அ" பதிவேடு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 14.12.2015ம் தேதிய வாதி பெயரிலும் மேற்படியாரின் சகோதரர்ளாகிய முத்தையா, பூசைத்துரை பெயரில் பட்டா எண். 359 என்பதற்குரிய 10(1) நகல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 26.03.1991ம் தேதிய சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதுவும் மூ.ளு.மே.105-1988 என்ற நம்பரில் விசாரணைக்கு வந்து சமூகம் நீதிமன்றத்தில் கூறப்பட்டுள்ள தீர்ப்புரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 26.03.1991ம் தேதிய சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதுவும் மூ.ளு.மே.105-1988 என்ற நம்பரில் விசாரணைக்கு வந்து சமூகம் நீதிமன்றத்தில் கூறப்பட்டுள்ள தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 11.11.2003ம் தேதிய மேற்படி இந்த வழக்கின் தாவாச் சொத்துக்களை வாதி கிரையம் வாங்கியதற்கான பதிவு செய்யப்படாத கிரையப் பத்திரம் அசல் (பதிவு செய்யப்படாத

ஆவணம் என்பதால் பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 14.03.2000ம் தேதிய தாவாச் சொத்துக்கள் சம்மந்தமாக வாதி மற்றும் அவர்கள் சகோதரர்கள் இடையே பாகப்பிரிவினை செய்யப்பட்ட வரைபடம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. 13.07.2016ம் தேதிய மேற்படி இந்த வழக்கின் தாவாச் சொத்துக்களுக்கு இந்த வழக்கின் வாதி தனது பெயரில் பட்டா வழங்கும்படி தேவகோட்டை வட்டாட்சியர் அவர்களுக்கு கொடுத்துள்ள மனு நகல் **வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. 13.07.2016ம் தேதிய மேற்படி இந்த வழக்கின் தாவாச் சொத்துக்களுக்கு இந்த வழக்கின் வாதி தனது பெயரில் பட்டா வழங்கும்படி தேவகோட்டை கோட்டாட்சியர் அவர்களுக்கு கொடுத்துள்ள மனு நகல் **வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. 13.07.2016ம் தேதிய மேற்படி இந்த வழக்கின் தாவாச் சொத்துக்களுக்கு இந்த வழக்கின் வாதி தனது பெயரில் பட்டா வழங்கும்படி சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கொடுத்துள்ள மனு நகல் **வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. 20.11.2019ம் தேதிய தாவாச் சொத்துக்களுக்கும் அதனுடன் சேர்ந்த சொத்துக்களுக்கும் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டுள்ள நான்குமால்கள் விபரங்கள் அடங்கிய சான்று நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

குறுக்கு விசாரணை:

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)